
பக்கங்கள் 17 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## கிணற்றில் தவறி வீழ்ந்து சிறுவன் பரிதாப மரணம்!

### வட்டவளையில் சோகம்



வட்டவளை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பின்ஓயா மேல் பிரிவு தோட்டத்தில் வீட்டுக்கு முன் னால் இருந்த கிணற்றில் 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 09 வெள்ளிக்கிழமை 22.03.2024 அதிர்வு 235



# யாழ். வந்தார் ரணில் காணிகள் விடுவிப்பு

## உரிமையாளர்களிடம் பத்திரங்களும் கையளிப்பு






(எஸ்.நிதர்ஷன்)

இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் 278 ஏக்கர் காணிகளை இன்று யாழ்ப்பாணம் வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று விடுவித்துள்ளார். 04▶

# யாழ்ப்பாணத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய அமைப்பாளரைத் தெரிவு செய்யவில்லை

## ரணில் பகிரங்க அறிவிப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய அமைப்பாளர் ஒருவரை இன்னும் உத்தியோகபூர்வமாகத் தெரிவு செய்ய வில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.க. நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

"ஐக்கிய தேசியக் கட்சியின் 04▶





# வடக்கு - கிழக்கின் மக்கள் மனு சிவில் சமூகப் பிரதிநிதிகள் கொழும்பில் இன்று மனோ எம்.பியை நேரில் சந்தித்துப் பேச்சு



தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியை, வடக்கு – கிழக்கின் மக்கள் மனு சிவில் சமூகப் பிரதிநிதிகள் குழு சந்தித்து உரையாடியது.

கொழும்பில் மனோ கணேசன் எம்.பியின் இல்லத்தில், இன்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மக்கள் மனு குழுவின் சார்பில் இணைப்பாளர் ஏ.ஜதீந்திரா, எஸ்.எஸ்.குகநாதன், எஸ்.மகாலிங்க சிவம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான மனோ கணே சன் இது பற்றி ஊடகங்களுக்குக் கூறி யதாவது:-

“எமது சந்திப்பு மிகக் காத்திரமாக நடைபெற்றது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சிங்கள பிரதான கட்சி வேட்பாளர்கள் அல்லது நாடாளு மன்றத் தேர்தலில் போட்டியிடும் சிங்கள பிரதான கட்சித் தலைவர்களுடன், தமிழ்த் தேசிய பிரச்சினை தொடர்பில், மாகாண சபைகள் என்ற அடிப்படையில் பொது குறைந்த பட்ச உடன்பாட்டைக் காண்பது தொடர்பில் கலந்துரையாட பட்டது.

வடக்கு – கிழக்கு மக்கள் மனு சிவில் சமூகப் பிரதிநிதிகள் குழுவுடன், குறைந்த பட்ச உடன்பாட்டை காணும் சிங்கள பிரதான கட்சிகள், தலைவர்கள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் அந்த உடன்பாட்டை இடம்பெறச் செய்ய வேண்டும் எனக் கலந்துரையாடினோம்.

எதிர்வரும் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலா, ஜனாதிபதித் தேர்தலா, அவ் வாறாயின் சிங்கள பிரதான கட்சி வேட்பாளர்கள், பொது தமிழ் வேட்பாளர் ஆகிய விடயங்கள் பற்றியும் கலந்துரை யாடினோம்.

“வாக்களியுங்கள், ஆட்சிக்கு வந்த பிறகு பார்ப்போம்” என்ற நிலைபாட்டுடன் தமிழ் மக்கள் மத்தியில் வந்து வாக்குக் கோர சிங்கள பிரதான கட்சிகள், கட்சிகளின் தலைவர்கள், வேட்பாளர்கள் ஆகியோருக்கு இனிமேல் இடம் தர முடியாது என்ற பொது நிலைபாட்டைப் பற்றியும் உரையாடினோம்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியால், மலையகத் தமிழர் தொடர்பில் சமூக நீதி ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு அனைத்து சிங்கள பிரதான கட்சிகளுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி கலந்துரையாடத் திட்ட மிட்டுள்ளது. எமது ஆவண நிலைப் பாடுகள், அந்தந்த கட்சிகளின் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞா பனங்களில் இடம்பெறுவதைப் பொறுத்தே எமது நிலைப்பாடு அமை யும் என்ற முடிவை நாம் ஏற்கனவே எடுத்துள்ளோம் என்பதை நான், வடக்கு – கிழக்கு மக்கள் மனு சிவில் சமூக பிரதிநிதிகள் குழுவுக்கு எடுத்துக் கூறினேன்.

ஈழத்தமிழ் சகோதரர்களின் குறைந்த பட்ச அபிலாஷைகளை நடைமுறைச் சாத்தியமான முறையில் விட்டுக்கொடுக் காமல் முன்னெடுக்கும் வடக்கு – கிழக்கின் மக்கள் மனு சிவில் சமூகப் பிரதிநிதிகள் குழுவுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயார் எனவும் நான் உறுதி அளித்தேன்.” – என்றார்.



# வர்த்தக நிலைய உரிமையாளர் சடலமாக மீட்பு!

## வவுனியா பொலிஸார் தீவிர விசாரணை

(கே.வசந்தன்)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல் – ஆலடி வீதியில் உள்ள பலசரக்கு வியாபார நிலையத்தில் இருந்தே மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளரான இரண்டு பிள்ளை களின் தந்தையான 43 வயதுடைய ரங்கசாமி நேசரத்தினம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

தனது குடும்பத்தைப் பிரிந்து தாயாருடன் வசித்து வந்த அவர், வியாபார நிலையத்தில் தங்கி இருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவு னியா பொலிஸார் தீவிர விசார ணைகளை முன்னெடுத்து வருகின் றனர்.



# அமைச்சர் டக்ளஸின் வாக்குறுதியையடுத்து கைவிடப்பட்டது உணவு தவிர்ப்புப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளை நிறுத்துமாறு கோரி நான்கு நாட்கள் இடம்பெற்ற உணவு தவிர்ப்புப் போராட்டம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உறுதிமொழியால் கைவிடப்பட்டது.

கடந்த செவ்வாய்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணை தூதரகத்திற்கு அருகாமையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் நான்கு போர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இன்று நான்காம் நாள் போராட்ட இடத்திற்கு வருகை தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

“இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி முதலமைச்சர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் பேசினேன்.

பாண்டிச்சேரி முதலமைச்சர் எல்லை தாண்டும் மீனவர்களைத் தடுப்பது தொடர்பில் எழுத்து மூலமான உறுதி மொழி தந்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் கடிதம் அனுப்பத் தயாராக இருப்பதாகவும், தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தேர்தல் ஆணையகத்துடன் ஆலோசித்து கடிதம் அனுப்புவதாகவும் கூறியிருக்கின்றார்.

மீனவர் பிரச்சனை தொடர்பில் பேச வருமாறு இந்தியத் தரப்பினர் அழைப்பு கொடுத்திருந்தார்கள். நான் அவர்களிடம் கூறியிருக்கின்றேன் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் வர மாட்டார்கள் என்ற எழுத்து மூலமாக உத்தரவாதம் தந்தால் மட்டுமே பேச்சுக்கு வருவேன் என்று கூறியுள்ளேன்.

எனது நிலைப்பாடு அன்று என்ன கூறினேனே அதுதான் எல்லை தாண்டி வரும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப் பட்டுவார்கள்.

கைது செய்யப்படுபவர்களை விடுவிக்க எனக்கு அழுத்தங்கள் வந்தாலும் எனது நிலைப்பாடு ஒன்றுதான்.

இதனால்தான் இந்தியா என்னை எதிரியாகப் பார்க்கின்றது. ஏனைய தமிழ் அரசியல்வாதிகள் மீனவர் பிரச்சினையில் மௌனமாக இருப்பதால் எதிரியாகப் பார்ப்பதில்லை .

ஆகவே, இந்தியத் தரப்பு சாதகமான சமிக்ஞைகளைக் காண்பித்துள்ள நிலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடுங்கள். மீனவர்கள் பக்கமே நான் நிற்பேன்.” – என்றார்.

உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு ஆதரவாக தும்பளை, கொட்டடி, சேந்தான் குளம், குருநகர், மாதகல், பலாலி, தையிட்டி, சக்கோட்டை, மயிலிட்டி, வளலாய், மயிலிட்டி மற்றும் சீத்திப்பந்தல் ஆகிய கடற்றொழில் சங்கங்களைச் சேர்ந்த மீனவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களுக்கு ஆதரவு தெரிவித்து இன்று வருகை தந்திருந்தனர்.









# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்














## யாழ். வந்தார்....

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த தனியார் காணிகள் 278 ஏக்கர் விடுவிக்கப்பட்டு அதற்கான பத்திரங்களையும் உரிமையாளர்களிடம் ஜனாதிபதி வழங்கி வைத்துள்ளார்.

இதற்கமைய ஜே/244 வயாவிளான் கிழக்கு, ஜே/245 வயாவிளான் மேற்கு, ஜே/252 பலாலி தெற்கு, ஜே/254 பலாலி வடக்கு, ஜே/253 பலாலி கிழக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் இருந்து காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிகழ்வில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## கிணற்றில்....

தவறி வீழ்ந்து சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

3 வயது 9 மாதங்கள் நிரம்பிய கதிரவேல் ரோஹித் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வீட்டுக்கு அருகில் உள்ள கிணற்றிலேயே அவர் வீழ்ந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வட்டவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்ப்பாணத்துக்கு....

மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் இந்த மறுசீரமைப்புகள் தொடர்பில் இதுவரையில் உத்தியோகபூர்வமாகத் தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை" – என்றும் அவர் மேலும் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளராக அருண் சித்தார்த் நியமிக்கப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை தனியார் மண்டபத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது ஐ.தே.கவின் பிரதித் தலைவரும் முன்னாள் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்க அறிவித்திருந்தார். இது தொடர்பில் ஐ.தே.க. நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.




| | |
|---|---|
| **ROASTED CHILLI POWDER** (Includes 14 spices) 250 G - 950/=, 100G - 395/= | **SPECIAL CUMIN SEED POWDER** 100G - 560/= |
| **UNROASTED CURRY POWDER** 250G - 850/=, 100G - 380/= | **CORIANDER POWDER** 100 G NEW - 190/= |
| **CHILLI POWDER** 100G - 290/= | **BLACK PEPPER POWDER** 100 G |

**FREE DELIVERY TO SPECIFIC AREAS**

**DELIVERY WILL BE CHARGED TO OTHER AREAS**

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# உண்மையே வெல்லும்!

'வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு என்றானாம்' - என்ற பேச்சு மொழி உள்ளது. அப்படி இருக்கின்றது நேற்று நாடாளுமன்றத்தில் தமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தின் போது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன கூறிய பதில்.

தம்மீதுசுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நேரடியாகப் பதில் தருவதை விடுத்து, சுற்றி வளைத்து போட்டடித்திருக்கின்றார் அவர்.

அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் முக்கியமானவை இரண்டு.

ஒன்று - அரசமைப்பு ஏற்பாடுகளுக்கும் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைக்கும் மாறாக நிகழ்நிலைக் காப்புச் சட்டத்துக்கு சான்றளித்தமை.

அடுத்தது - அரசமைப்புக்கு கவுன்ஸில் கூட்டத்தின் முடிவை வேண்டும் என்றே தவறான முறையில் அர்த்தப்படுத்தி, கூட்ட முடிவு தொடர்பில் பிழையாகச் சான்றுரைத்தமை.

முதல் குற்றச்சாட்டு தொடர்பில் தெளிவான பதில் அவரிடம் இல்லை. சட்டமா அதிபர் தரப்பு தந்த ஆலோசனை என்று, குற்றச்சாட்டை சட்டமா அதிபர் தரப்பு மீது சுமத்தி விட்டு அவர் தப்ப எத்தனிக்கின்றார்.

அந்த நிகழ்நிலைக் காப்பு சட்டத்திற்குச் சான்றளித்த விடயத்தில் தவறு, அரசமைப்பு ஏற்பாடுகளுக்கும் உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டலுக்கும் மாறாக இழைக்கப்படுவது வெளிப்படையாக தெரியும் போது - அதனை எதிர்க்கட்சிகள் அப்பட்டமாக சுட்டிக் காட்ட சுட்டிக்காட்ட - அந்தத் தவறை இழைத்துவிட்டு, இப்போது வந்து சட்டமா அதிபர் தரப்பு பக்கம் கையைக் காட்டி, அவர் தப்ப முயல்வது அப்பட்டமான சுத்து மாத்தின்றி வேறில்லை.

அடுத்த விடயத்தில் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொள்ளும் வகையில் அதற்கு விளக்கம் கூறுகின்றார் அவர். அது வியப்பானது.

சரியான நோக்கத்திற்காக ஒரு தவறான விடயத்தை செய்தாலும் தவறு தவறுதான். நாட்டுக்கு ஒரு நிரந்தரப் பொலிஸ்மா அதிபர் தேவை என்ற தேசத்தின் பாதுகாப்பு கருதி, அதன் அடிப்படையில், அப்படி ஒரு தீர்மானத்தைத் தாம் எடுத்தார் என அவர் இப்போது நியாயம் பிளப்பது அர்த்தமற்றது.

நிலையான பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க கூடிய விதத்தில், சரியான ஒருவரை பரிந்துரைக்க வேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பு. அவர் அதைச் செய்ய மறுக்கின்ற போது, அவரின் கட்டாயப்படுத்தலுக்காக அரசமைப்பைத் தவறாக அர்த்தப்படுத்தி நடவடிக்கை எடுப்பது மிகப்பெரும் தவறாகும். அதற்குத் தேசியப் பாதுகாப்பைக் காரணம் காட்டி அவர் தப்ப முயல்வது அதைவிடப் பெரிய தவறாகும். தமது இந்த விளக்கத்தின் மூலம் இவ்விடயத்தில் தமது குற்றத்தை அவர் ஒப்புக்கொள்கின்றார் என்பதே அர்த்தமாகிறது.

அவரே சுட்டிக் காட்டி இருப்பது போல, நாடாளுமன்ற சபாநாயகர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை முன் வைக்கப்பட்ட சம்பவம் இது முதலாவது அல்ல. ஏற்கனவே முன்னர் நான்கு தடவை கள் இதே போல முன்வைக்கப்பட்டன. அவை நான்கும் நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளை அப்போதைய சபாநாயகர்கள் மீறினர் என்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் எழுந்தவை. ஆனால் இந்த சபாநாயகருக்கு எதிரான பிரேரணை அரசமைப்பு ஏற்பாடுகளையே மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டது. அதனால் இது பாரதூரமானது.

நாடாளுமன்றத்தில் தமது அரசுக்கு இருக்கும் பெரும்பான்மைப் பலம் காரணமாக இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை இந்த சபாநாயகரின் அரசாங்கம் தோற்கடித்திருக்கலாம். ஆனால் அரசமைப்பு ஏற்பாடுகளையும், உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்களையும் சபாநாயகர் மீறினார் என்ற குற்றச்சாட்டுகளுக்கு அரசு தரப்பினாலோ அல்லது அவராலோ நியாயமான விளக்கம் - சரியான பதில் - வழங்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

நாடாளுமன்ற வாக்கெடுப்பில் சபாநாயகர் தப்பிப் பிழைத்திருக்கலாம். ஆனால் விடயம் இத்துடன் முடிந்து விடப் போவதில்லை.

நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பாக அவர் எடுத்த முடிவை ஆட்சேபித்து நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் திங்களன்று உயர்நீதிமன்றத்திற்குப் பரிசீலனைக்கு வருகின்றன.

தவிரவும், பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் அரசமைப்பு கவுன்ஸில் முடிவுக்கு அவர் கொடுத்த அர்த்தமற்ற விளக்கமும் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது.

இறுதியில் இவ்விடயங்கள் விரைவில் வரவிருக்கும் தேர்தல்களிலும் நேரடி பேசுபொருள்களாக இருக்கும்.

ஆக அவரின் முடிவுகள், செயற்பாடுகள் தொடர்பிலான விவகாரம் நாடாளுமன்றில் முடிவுக்கு வந்திருக்கலாம். ஆனால் உயர் நீதிமன்றத்திலும் மக்கள் நீதிமன்றத்திலும் முடிவுகள் இனித்தான் வர வேண்டும். அங்கு பெரும்பான்மை அல்ல, உண்மையை வெல்லும்.

# புனர்வாழ்வு பெற்ற இளைஞருக்கு சுய தொழில் உதவித் திட்டங்கள்



(கே. எ. ஹமீட் )

போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வு பெற்ற இளைஞர்களுக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சுய தொழில் திட்டங்கள் தொடங்கி வைத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வு பெற்ற இளைஞர்களின் புதிய வாழ்வின் ஆரம்பமாக கோழிப் பண்ணை, மரக்கறிக்கடை, ஒட்டு வேலை, பால் மாடு வளர்ப்பு போன்ற சுயதொழில் திட்டங்களைத் ஆரம்பிக்க ஒவ்வொருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வழங்கி வைக்கப்பட்டது.

அம்பாறையில் உள்ள ஆளுநரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பொலிஸ் மா அதிபர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# மீசாலை ரைற்றன்ஸ் அணிக்கு சீருடை!





(த.சுபேசன்)

தென்மராட்சி பிறீமியர் லீக் கிரிக்கெட் தொடரை முன்னிட்டு அந்தத் தொடரில் கடந்த வருடம் சாம்பியன் பட்டம் வென்ற மீசாலை ரைற்றன்ஸ் அணிக்கான சீருடை அறிமுக நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி நகரில் இடம்பெற்றிருந்தது.

சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி மற்றும் சூழகம் அமைப்பின் இணைப்பாளர் க.குணாளன் ஆகியோர் மேற்படி அணி வீரர்க ளுக்கான சீருடையை வழங்கி அறிமுகம் செய்து வைத்திருந்தனர்.



# கொடிகாமம் அரசினர் வித்தி. புதிய நிர்வாகிகள் தெரிவாகினர்

(த.சுபேசன்)

கொடிகாமம் அரசினர் வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் வித்யாலய முதல்வர் ப.தர்மபூவதி தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது புதிய நிர்வாக சபையின் தலைவராக பாடசாலையின் முதல்வர் ப.தர்மபூவதியும், செயலாளராக கலாநிதி வைத்திலிங்கம் ஜெகதாஸும், பொருளாளராக ஆசிரியர் திருமதி சிவலோகநாதன் சாந்தினியும், உப செயலாளராக திருமதி செல்வம் அனுசயாவும் , நிர்வாக உறுப்பினர்களாக ச.நிஷாந்தினி, அ.சிந்துஷா, ஆ. சுகன்யா, இ.அனுரதன், ஜெ. ஜீவாந்தினி, தே. சங்கீதா, ம.வசந்தன், கு. டயானா, சி. நிரஞ்சனா மற்றும் ஆசிரியர் வி. சுகந்தினி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# உலக சாதனையாளர் திருச்செல்வம் ஞாயிறு காலிமுகத் திடலில் சாதனை செய்யவுள்ளார் !

**(த.சுபேசன்)**

சாவகச்சேரி – மட்டுவில் கிராமத்தைச் சேர்ந்த 60 வயதான உலக சாதனையாளர் செ.திருச்செல்வம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலிமுகத்திடலில் புதிய உலக சாதனை ஒன்றை நிலைநாட்டவுள்ளார்.

தாடி மற்றும் தலைமுடியால் கனரக வாகனத்தை இழுத்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் தனது மூன்றாவது உலக சாதனையைப் பதிவு செய்யும் பொருட்டு இந்த சாகசத்தை முன்னெடுக்கவுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு காலி முகத்திடல் தாஜ் சமுத்திரா ஹோட்டல் முன்பாக இந்த உலக சாதனை முயற்சி இடம்பெறவுள்ளது.

உலக சாதனையாளர் திருச்செல்வம் இதற்கு முன்னர் தனது தலைமுடியின் உதவியுடன் 1500 கிலோ எடை கொண்ட வாகனத்தை 1500 மீற்றர் தூரம் இழுத்து உலக சாதனை படைத்தார். அத்துடன் 1500 கிலோ எடை கொண்ட வாகனத்தைத் தனது தாடியின் உதவியால் பின்புறமாக 400 மீற்றர் தூரம் இழுத்தும் சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நூல் வெளியீடும் கௌரவிப்பும்



**(த.சுபேசன்)**

தென்மராட்சி வரணி – மாசேரி திருவருள்மிகு புராதன குருநாதர் கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு 'சத்துருசங்கார வேல் பதிகம்' நூல் வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் ஆலய பரம்பரை தர்ம கர்த்தாவும் பிரதம பூசகருமான சைவப் புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் ஆன்மீக பிரதம விருந்தினராக யாழ். மாவட்டசெயலக காணிப் பகுதியின் வடவலய பிரதி பதிவாளர் நாயகம் சைவப்புலவர் ஆனந்தி ஜெயரட்ணம் கலந்து கொண்டார். அவருக்கு 'சிவஞான வித்தகி' என்ற உயர் விருது வழங்கப்பட்டது.

ஆலயத்துக்கு 07 வாகனங்களையும், சப்பை ரதத்தையும் செய்து உதவிய புதுக்குடியிருப்பை சேர்ந்த ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ கெங்காதரன் கனகசபேசனுக்குச் சிற்பகலா வித்தக ஜோதி என்ற உயர்விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அத்துடன் மயிலிபட்டி பரம்பரையில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகள் பெற்று சாதனை படைத்த சங்கத்தானையை சேர்ந்த செல்வன் மயூரன் அக்சயனுக்கும் வாழ்த்துப்பா வழங்கப்பட்டது.

அத்தோடு நூல் வெளியீடும் நடைபெற்றிருந்தது.





# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மொழிபெயர்ப்பு தினம்

(பழுவூரான்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மொழி பெயர்ப்பு தினம் மற்றும் கண்காட்சி நேற்று வியாழக் கிழமை (21) பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றன.

கலை கலாசார பீட மொழித்துறை ஏற்பாட்டில், துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீ கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கலை கலாசார பீட பதில் பீடாதிபதி ஜி.விக்னேஷ்வரன் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், மட்டக்களப்பு கல்விக் கல்லூரியின் முன்னாள் உபபீடாதிபதி மனோகரன் அதிதி உரையாற்றினார்.

கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீட பீடாதிபதி பேராசிரியர் சதானந்தன், தொழிநுட்பவியல் பீட பீடாதிபதி பேராசிரியர் மதிவேந்தன், பட்டதாரி கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கென்னடி மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் உட்பட மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது The Student Translator, The Translator's Glossary ஆகிய தலைப்புகளில் மென்பிரதி நூல்கள் வெளியீட்டு வைக்கப்பட்டன. தென் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் அஷ்ரப் நூல் திறனாய்வு உரையை நிகழ்தினார்.

விழாவின் மற்றொரு முக்கிய அம்சமாக நடைபெற்ற மொழிபெயர்ப்பு தொடர்பான விடயங்கள் அடங்கிய கண்காட்சியை கலை கலாசார பீட பதில் பீடாதிபதி ஆரம்பித்து வைத்தார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டன.





# கல்முனை மாநகர சபைக்கு களப்பாதுகாப்பு காலணிகள்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை சுகாதாரத் தொழிலாளர்களின் நலன்கருதி ஒரு தொகை களப்பாதுகாப்பு காலணிகளை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வழங்கியுள்ளது.

இவற்றை கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியிடம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஷகீலா இஸ்ஸதீன் நேற்று வியாழக்கிழமை (21) கையளித்தார்.



இந்த நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பொதுச் சுகாதாரத்துறை பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஷாபி, மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், சுகாதாரப் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.எம். பயாஸ், களஞ்சியப் பொறுப்பாளர் கே. மகேந்திரராஜா ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் திண்மக் கழிவகற்றல் சேவையில் ஈடுபடும் ஊழியர்களின் பாதுகாப்பையும் சுகாதார நலன்களையும் கருத்தில் கொண்டு அவர்களது நலத் திட்டத்துக்கு உதவுமாறு மாநகர ஆணையாளர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்தப் பாதணிகளை வழங்க பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்திருந்தார்.



# மதுவரி பிரதி ஆணையாளராக தங்கராஜா நியமனம் பெற்றார்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கை மது வரித் திணைக் களத்தின் பிரதி ஆணையாளராக (மனித வளம்) கிழக்கு மாகாண மதுவரி திணைக்கள உதவி ஆணையாளர் ரோட்டேரியன் சண்முகம் தங்கராஜா நியமிக்கப்பட்டார்.

சண்முகம் தங்கராஜா மதுவரித் திணைக்கள வரலாற்றில் கிழக்கு மாகாணத்தில் இருந்து தெரிவு செய் யப்பட்ட முதலாவது பிரதி ஆணை யாளர் என்ற பெருமையை பெறுகி றார்.

அவர் கொழும்பில் தனது உயர் பதவியை நேற்று (21) பொறுப்பேற்றுக் கொண்டார் .

இவர் மதுவரி திணைக்கள கிழக்கு மாகாண உதவி ஆணையாளராக செயற்படும் அதேவேளை, முழு இலங் கைக்கான பிரதி ஆணையாளராக பதில் கடமையையும் ஆற்றுவார்.

# கற்பிட்டி அல் அக்ஸாவின் பழைய மாணவர் கூட்டம்

**(கற்பிட்டி - சியாஜ்)**

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்க ளுக் கான பொதுக் கூட்டம் எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை(24) காலை 09 மணிக்கு பாடசாலையின் கேட் போர் கூடத்தில் பாடசாலையின் அதி பர் தலைமையில் நடைபெற உள் ளது.

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாட சாலையின் பழைய மாணவர் சங்கம் காலாவதியாகி ஆறு மாதங்கள் கடந்து விட்ட நிலையில் பழைய மாணவர் சங்கத்தின் பதவி நிலை தலைவ ரான அதிபர் கூட்டத்துக்கு அழைப்பு விடுக் காது காலாவதியான அதி காரப் பூர்வ மற்ற சங்கத்தின் இணைப்பு செயலா ளரினால் மேற்படி கூட்டத் துக்கு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

# கிழக்கு மாகாணத்தில் மழை; இரு நாள்களாகப் பெய்கிறது!

**(வடிவேல் டினேஸ்)**

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் மற்றும் அம்பாறை மாவட் டத்தின் கல்முனை , அக்கரைப்பற்று, பொத்துவில் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று அதிகாலை முதல் இரண்டு நாள்களாக மழை பெய்து வருகின்றது.

பங்குனி மாதத்தில் வெப்பம் அதிகரித்துக் காணப்பட்ட நிலையில் திடீரென்று மழை பெய்து வருகின்றது.

அத்துடன் கிழக்கின் கரையோர பகுதி அதிக காற்றுக் காரணமாகச் சீற்றுக் காணப்படுகிறது. இதனால் கிழக் கின் கரையோர மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் இன்று அதிகாலை முதல் அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில் , கல்முனை உள்ளிட்ட கரையோர பகுதிகளில் தொடர்ச்சியாக இடியுடன் கூடிய மழை பெய்து வரு கின்றது. பலத்த காற்றும் வீசுகின்றது.

இதனால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறைக் கூட்டம் கொழும்பில்

(எம். எப். றிபாஸ்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயற் குழு கூட்டம் கொழும்பில் நேற்று (21) இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றிஷாட் பதியுத்தீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயற் குழுவின் உயர்பீட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும், மாவட்ட ரீதியாகக் கட்சி மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் சம்பந்தமாகவும் விரிவாக ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன.





# தொழில்முனைவோரை மேம்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரை மேம்படுத்த அரசு பல வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத் திட்டங்கள் மூலம் நாட்டில் பல புதிய தொழில்முனைவோரை உருவாக்க அரசு எதிர்பார்க்கிறது என்றும் அவர் வலியுறுத்தினார்.

சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களை மேம்படுத்துவதற்கு அரசு அதிகபட்ச பங்களிப்பையும் ஆதரவை யும் வழங்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கம்பஹா, நைவல ஜயசிங்க சிட்டி சென்றரில் புதிய உணவகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனை தெரிவித்தார்.

இந்த உணவகத்தில் விருந்து அரங்குகள், கேட்போர் கூடம் உள்ளிட்ட பல வசதிகள் உள்ளன. இந்த உணவகத்தின் மூலம் அனைத்து பண்டிகை நிகழ்வுகளுக்கும் சுவையான உணவு மற்றும் பானங்கள் வழங்கப்படுகின்றன.

அதன் அதிநவீன விருந்து மண்டபத்தில் ஒரே நேரத்தில் 1000 பேர் அமர முடியும்.

ஜயசிங்க சிட்டி சென்டரில் ஒரு வணிக வளாகமும் உள்ளது. இங்கு வரும் மக்கள் அனைத்து வசதிகளையும் ஒரே இடத்தில் பெற முடியும்.

கிட்டத்தட்ட 200 ஊழியர்கள் தற்போது ஜெயசிங்க குழுமத்தின் கீழ் பணிபுரிகின்றனர்.

ஜயசிங்க சிட்டி சென்டரின் தலைவர் அஜித் ஜயசிங்க அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு இதன்போது நினைவு பரிசு ஒன்றை வழங்கினார்.

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சிவதீட்சை வழங்கும் நிகழ்வு

(த.சுபேசன்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நாளை மறுதினம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சிவதீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று சங்கத்தின் தலைவர் சி.கா. கமலநாதன் தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தலைவர் இ.மேகராசா தலைமையில், சச்சிதானந்தமூர்த்திக் குருக்களால் வழங்கப்படவுள்ள சிவதீட்சையைப் பெற விரும்புவோர் 0771768830 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கோள்ள முடியும் .

சிவதீட்சை பெறுபவர்களுக்குச் சங்கத்தால் சான்றிதழும், நித்திய அனுஷ்டான விதிப் புத்தகமும் வழங்கப் படும் என்று மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது.





# கல்முனையில் நடைபெற்ற வாய் சுகாதார தின நிகழ்வு

( வி.ரி.சகாதேவராஜா)

உலக வாய்ச் சுகாதார தினம் கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு இந்த நிகழ்வானது நேற்று முன்தினம் வைத்தியசாலையின் கேட்போர்கூடத்தில்வைத்தியசாலையின் பற்சிகிச்சை பிரிவினரின் ஏற்பாட்டிலும் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையிலும் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையைப் பல் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.எஸ். யூ.ஷி(கு)பா வழங்கினார்.

வைத்தியசாலையின் பல் வைத்திய நிபுணர் டாக்டர் ஐ.எம்.ஐ.முன்ஷிப்பால் பற்சிகிச்சை பற்றிய விழிப்புணர்வு விளக்கவுரை நிகழ்த்தப்பட்டது.

அவர் தனதுரையில் பற்களின் முக்கியத்துவம், பற்களில் ஏற்படும் நோய்களின் அறிகுறிகள், வாய் புற்றுநோய் ஏற்படும் சந்தர்ப்பங்கள், பல் துலக்கும் சரியான முறைகள், பற்சிகிச்சை முறைகள், மருந்துகள் பற்றி விளக்கமாக விவரித்தார்.

பற்சிகிச்சை பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி. வி.சுதானந்தி நன்றியுரையாற்றினார்.

நிகழ்ச்சியினை சுகாதார கல்வி பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி. என்.மனோஜினி தொகுத்து வழங்கியிருந்தார்.









# மருதமுனை பாடசாலைகளின் மேம்பாட்டுப் பேரவைக் கூட்டம்

(நூருல் ஹுதா உமர் )

மருதமுனையின் கல்வி மேம்பாடு மற்றும் ஒழுக்க சீராக்கம் ஆகிய விடயங்களை முன்னிறுத்தி "மருதமுனை பாடசாலைகளின் மேம்பாட்டு பேரவை" முன்வைத்த விடயங்களின் மீளாய்வுக் கூட்டம் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் மருதமுனை அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் நேற்று (21) நடைபெற்றது.

கல்முனை வலயக்கல்வி பணிமனை பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர், கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப் பாளர்கள் ஆன எம்.எச்.றியாஸா, பீ. ஜிஹானா ஆலிப் உள்ளிட்ட வலயக் கல்வி அலுவலக அதிகாரிகளுடன் மருதமுனையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், அதிபர்கள், பிரதி அதிபர்கள் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

நோன்பு கால விடுமுறை வகுப்புக்கள் தொடர்பில் இங்கு கலந்தாலோசிக்கப்பட்டது. பேரவையின் அங்குரார்ப்பண கூட்டத்தில் எடுக்கப்பட்ட முதலாவது தீர்மானமானது, நோன்பு 20 வரை உயர்தரம் தவிர்ந்த ஏனைய மாணவர்களின் பாடசாலை நேரசூசி வகுப்புக்கள் மதியம் 12 மணிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும் என்ற விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மேற்படி தீர்மானத்தில் 90 விதத்துக்கும் அதிகமான வெற்றியை அடைந்துள்ளனர் என்றும் அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகளுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் கூட்டத்தின் தலைவர் வலயக் கல்விப் பணிப்பாளர் தமது உரையில் சுட்டிக்காட்டினார்.

12 மணிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்ட தீர்மானத்துக்கு மாற்றமாக செயற்பட்ட ஆசிரியர்களை அழைத்து கதைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கென குழுவொன்றும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

உயர்தரம் எழுதும் மாணவர்களின் குறுங்காலத்தைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தில் மாற்றமில்லை எனவும் அது தொடர்பில் மாணவர்களின் இயலுமைக்கேற்ப ஆசிரியர்கள் தொழிற்பட வேண்டும் எனவும் மீள வலியுறுத்தப்பட்டது.

மாணவர்களின் நோன்புகால செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னெடுப்பு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்மானமொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

12 மணிக்கு முன்னர் வகுப்புக்களை நிறைவுறுத்த வேண்டும் என்பதில் பாடசாலை நேரசூசிகளை ஒரு நிலைப்படுத்துவதற்கான கலந்தாலோசனை முன்வைக்கப்பட்டு அதிபர்களின் ஏற்றுக் கொள்ளலுடன் கூட்டம் நிறைவுபெற்றது.

# விழுது சஞ்சிகையின் முதலாவது வெளியீடு!

(சம்மாந்துறை)

விழுது சஞ்சிகையின் முதலாவது நூலான "ஸஹ்று ரமழான்" சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு கடந்த புதன்கிழமை திராசத்துல் இஸ்லாமிய்யா கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவன் அகமட் கபீர் ஹஷான் அஹமட் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக சம்மாந்துறைப் பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மட் ஹனிபா கலந்து கொண்டார்.




சிறப்பு அதிதியாக மாவட்ட உள வளதுணை ஆலோசகர் மனூஸ் அபூபக்கர், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலய ஆசிரியர் எம்.ஆர். பௌஸான் அஹமட், முஸ்லிம் கலாச்சார உத்தியோகத்தர் ஏ. எம்.ஆரிப் , சஞ்சிகையின் சிரேஷ்ட ஆலோசகர் ரிப்கான், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலய ஆசிரியர் ஹாதிக் இப்ராஹிம், சஞ்சிகையின் இணை ஆசிரியர்களான வவுனியா பல்கலைக்கழக மாணவன் ஜப்பார் ரோஷன் அக்தர், சம்மாந்துறை அல் அஷ்ஹர் பாடசாலையின் ஆசிரியர் ஏ.பீ. எம்.அஜ்வத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சஞ்சிகை அறிமுக உரையைத் தொடர்ந்து இணையாசிரியர்கள் பிரதம ஆசிரியரிடம் சஞ்சிகையைக் கையளிக்க, பிரதம ஆசிரியரால் சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மட் ஹனிபாவிடம் சஞ்சிகையின் முதற் பிரதி வழங்கப்பட்டது.

இறுதியாகச் சிறப்புரையை திராசத்துல் இஸ்லாமிய்யா அரபுக் கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஸ்மதுல்லாஹ் வழங்கினார்.

# தமிழகத்தில் பா.ஜ.கவால் தனித்து நிற்க முடியுமா?

## சீமான் கேள்வி




மக்களவைத் தேர்தலில் 8 கோடி மக்களுடன் நாம் தமிழர் கட்சி வலுவான கூட்டணி அமைத்திருக்கிறது என்று சீமான் தெரிவித்துள்ளார்.

கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமை வகித்தார். கட்சி நிர்வாகிகள் மற்றும் மக்களவைத் தேர்தல் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர். இதன்போது சீமான் கருத்து தெரிவிக்கையில்,

"யாரென்றே தெரியாத கட்சிக்கு விவசாயி சின்னத்தை வழங்கி, எங்களது வளர்ச்சியை திட்டமிட்டுத் தடுக்க முற்படுகின்றனர்.

எந்த சின்னத்தை ஒதுக்கினாலும், நான் போட்டியிடுவேன். வெற்றி பெற்று அங்கீகாரம் பெறுவேன். அதேபோல, அனைத்துக் கட்சிகளும் தனித்து நின்று அங்கீகாரம் பெற்று, சின்னத்தைப் பெறுவார்களா? குறிப்பாக, தமிழகத்தில் பாஜகவால் தனித்து நின்று அங்கீகாரம் பெற முடியுமா?

தமிழகத்தில் 3 கூட்டணிகள் உள்ளன. நாங்கள் மட்டும்தான் தனி அணி. நான் தனியாக நின்று, 3 கூட்டணிகளையும் எதிர்ப்பேன். நாம் தமிழர் கட்சி 8 கோடி மக்களுடன் வலுவான கூட்டணி அமைத்துள்ளது.

பல மாநிலங்களில் 5, 7 கட்டங்களாக தேர்தலை நடத்துகின்றனர். ஆனால், தமிழகம், புதுச்சேரியில் ஒரே கட்டமாக தேர்தல் நடத்துகிறார்கள். பா.ஜ.க. வலிமை இல்லாத மாநிலங்களில்தான் தேர்தல் விரைவாக நடத்தப்படுகிறது." – என்றார்.

# அ.தி.மு.க. வேட்பாளர்கள் 33 பேரில் 32 பேர் புதுமுகங்கள், 5 பேர் வாரிசுகள்



அ.தி.மு.க. வேட்பாளர்கள் 33 பேரில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரின் மகன் ஜெயவர்த்தன் மட்டுமே மக்களவைத் தேர்தலில் இருமுறை போட்டியிட்டவர். ஏனைய 32 வேட்பாளர்களும் புதுமுகங்கள்.

அதேபோல, 5 பேர் மருத்துவர்கள், 4 பேர் பொறியியல் பட்டதாரிகள், 2 பேர் முனைவர் பட்டம் பெற்றவர்கள், 4 பேர் வழக்கறிஞர்கள், 9 பேர் பட்டதாரிகள். அதேநேரத்தில், ஒருவர் மட்டுமே பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரின் மகன் ஜெயவர்த்தன், முன்னாள் எம்.எல்.ஏ. கோவிந்தராசுவின் மகன் சிங்கை ராமச்சந்திரன், முன்னாள் எம்.எல்.ஏ. பவுன்ராஜ் மகன் பாபு, முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் தனபால் மகன் லோகேஷ் தமிழ்செல்வன், முன்னாள் எம்.பி. சவுந்தரம் மகன் ஆற்றல் அசோக்குமார் ஆகியோருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ராயபுரம் மனோ (காங்கிரஸ்), சரவணன் (பா.ஜ.க.), சிம்லா முத்துச் சோழன் (தி.மு.க.), பசிலியன் நாசரேத் (தி.மு.க.) ஆகியோர் ஏனைய கட்சியில் இருந்து அ.தி.மு.கவில் இணைந்தவர்கள். சிம்லா முத்துச்சோழன் 2016 சட்டப்பேரவை தேர்தலில் ஜெயலலிதாவை எதிர்த்து, சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் போட்டியிட்டு, தோல்வியடைந்தவர் ஆவார்.

வடசென்னை, தென் சென்னை, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், அரக்கோணம், வேலூர், தருமபுரி, திருவண்ணாமலை, ஆரணி, கள்ளக்குறிச்சி, சேலம், ஈரோடு, நீலகிரி, கோவை, பொள்ளாச்சி, பெரம்பலூர், தேனி, தூத்துக்குடி ஆகிய 18 தொகுதிகளில் அ.தி.மு.க. – தி.மு.க. நேரடியாக மோதுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் ஆணையர் நியமன சட்டத்தை இடைநிறுத்த உச்ச நீதிமன்றம் மறுப்பு



தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பான சட்டத்தை மத்திய அரசு கடந்த ஆண்டு கொண்டு வந்தது. இதன் படி உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைக் கொண்ட குழு தேர்தல் ஆணையர்களை தேர்வு செய்வதற்கு பதிலாக பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மத்திய அமைச்சர் ஒருவரை கொண்ட குழு தேர்தல் ஆணையரை தேர்வு செய்யும் என அதில் கூறப்பட்டுள்ளது.

அதன்படி புதிய தேர்தல் ஆணையர்களாக ஞானேஷ் குமார், சுக்பீர் சிங் சாந்து ஆகியோரை பிரதமர் நரேந்திர மோடி, அமைச்சர் அமித் ஷா, மக்களவை காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி ஆகியோரை கொண்ட குழு கடந்த 14 ஆம் திகதி தேர்வு செய்தது. மறுநாள் இருவரும் தேர்தல் ஆணையர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

இதற்கிடையில் தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பான புதிய சட்டத்துக்கு தடை விதிக்க கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெயா தாக்குர், ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் உள்ளிட்டோர் தாக்கல் செய்த இந்த மனு கடந்த 15 ஆம் திகதி விசாரணைக்கு வந்தது. அப்போது புதிய தேர்தல் ஆணையர்கள் நியமனத்துக்கு இடைக்கால தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, தீபங்கர் தத்தா அமர்வு முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது ஏ.டி.ஆர். அமைப்பு சார்பில் வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் ஆஜராகி வாதிட்டார். தேர்வு நடைமுறையில் உள்ள குறைபாடுகளையும் இந்த வழக்கு விசாரணைக்கு வருவதற்குள் அவசரமாக நியமனம் மேற்கொள்ளப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அப்போது நீதிபதி சஞ்சீவ் கன்னா, "புதிய தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டு விட்டனர். தேர்தல் நெருங்கி விட்டது. நியமிக்கப்பட்டவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் ஏதுமில்லை" என்றார்.

இதையடுத்து மனுதாரர்களின் வாதங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று உறுதி அளித்த நீதிபதிகள், புதிய சட்டத்தை நிறுத்தி வைக்க மறுத்து விட்டனர்.

"தேர்தல் ஆணையம் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் செயல்பட வேண்டும். பொதுவாக இடைக்கால உத்தரவின் மூலம் நாங்கள் ஒரு சட்டத்தை நிறுத்தி வைப்பதில்லை. தேர்தல் நெருங்கிவிட்ட இத்தருணத்தில் தேர்தல் ஆணையர்கள் நியமன சட்டத்தை நிறுத்தி வைக்க இயலாது. அவ்வாறு நிறுத்தி வைத்தால் அது குழப்பம் மற்றும் நிச்சயமற்ற சூழலுக்கு வழிவகுக்கும்." என்று நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

# விருதுநகர் மக்களவைத் தொகுதியில் ராதிகாவை களமிறக்க பா.ஜ.க. திட்டம்



நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் விருதுநகர் தொகுதியில் நடிகை ராதிகாவை களமிறக்க பா.ஜ.க. திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓரிரு நாளில் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என்ற எதிர்பார்ப்பில் பா.ஜ.கவினர் காத்திருக்கின்றனர்.

விருதுநகர் தொகுதியில் பா.ஜ.க. நேரடியாக போட்டியிடுவதா அல்லது கூட்டணிக்கு ஒதுக்குவதா என்ற குழப்பமான சூழ்நிலையும் நிலவி வந்தது. தே.மு.தி.கவுடனான கூட்டணிப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால், ச.ம.கவை பா.ஜ.கவில் இணைத்தமைக்காக ராதிகா சரத்குமாருக்கு விருதுநகர் தொகுதி ஒதுக்கப்படலாம் எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி நடிகர் சரத்குமாரால் கடந்த 2007 இல் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகித்தார். பின்னர், அ.தி.மு.கவில் சேர்ந்தார். அதன்பின் அ.தி.மு.கவிலிருந்து விலகி 2007 ஓகஸ்ட் 31 இல் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியைத் தொடங்கினார்.

கடந்த 2011 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி சார்பில் இரட்டை இலை சின்னத்தில் தென்காசி மற்றும் நாங்குநேரி ஆகிய இரு தொகுதிகளில் சமக வெற்றிபெற்றது. தென்காசியில் சரத்குமாரும் நாங்குநேரியில் எர்ணாவூர் ஏ.நாராயணனும் வெற்றிபெற்றனர். 2016 இல் திருச்செந்தூர் தொகுதியில் போட்டியிட்டு சரத்குமார் தோல்வி அடைந்தார்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நீதி மய்யத்துடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட சரத்குமார், கடந்த 12 ஆம் திகதி சமத்துவ மக்கள் கட்சியை பா.ஜ.கவுடன் இணைத்தார்.

அதையடுத்து, விருதுநகர் மக்களவைத் தொகுதியில் நடிகை ராதிகா சரத்குமாரை களம் இறக்க பா.ஜ.க. திட்டமிட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.



# காசாவின் சுகாதார கட்டமைப்பை இலக்கு வைக்கும் இஸ்ரேலிய படை

பாலஸ்தீனியர்களை வெளியேற்றுவதற்காக திட்டமிட்ட முறையில் காசாவின் சுகாதார கட்டமைப்பை இஸ்ரேலிய படையினர் அழித்துவருவதாக அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவை சேர்ந்த மருத்துவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த நிலையில் இது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்திற்கு தெரிவிக்கவுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

காசாவின் மருத்துவமனைகளில் தாமாக முன்வந்து பணியாற்றிய பின்னர் நாடு திரும்பியுள்ள மருத்துவர்கள் அமெரிக்க ஜனாதிபதியின் நிர்வாகத்தின் முக்கிய அதிகாரிகளை இந்த வாரம் சந்திக்கவுள்ளனர்.

பைடன் நிர்வாகத்துடனான இந்த சந்திப்பின்போது பாதுகாப்பான உணவு விநியோகம் சுகாதார சேவைகளை மீண்டும் கட்டியெழுப்புதலிற்கு அவசியமான யுத்தநிறுத்த உடன்படிக்கை இன்றி குண்டு வீச்சில் சிக்கியுள்ள பாலஸ்தீனியர்களிற்கான நிதி உதவியை அதிகரிப்பது அர்த்தமற்ற விடயம் என மருத்துவர்கள் வலியுறுத்தவுள்ளனர் என கூறப்படுகிறது.

இதற்கமைய, இஸ்ரேலிய படையினர் அதிர்ச்சி தரும் அட்டூழியங்களில் ஈடுபட்டுள்ளனர் என காசாவின் அல் அக்சா மருத்துவமனையில் பணியாற்றிய பேராசிரியர் நிக்மேய்னார்ட் தெரிவித்துள்ளார்.

சுகாதார கட்டமைப்புகளை இஸ்ரேலிய படையினர் திட்டமிட்ட முறையில் அழிக்கின்றனர் எனவும், பணியாளர்களை அழிக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

“இது வெறுமனே கட்டடங்களை இலக்கு வைப்பது தொடர்பானது மாத்திரமில்லை. இது மருத்துவமனையின் உட்கட்டமைப்பை அழிப்பது தொடர்பானது.

அல்ஸிபா மருத்துவமனையின் ஒக்சிசன் டாங்கியை அழிப்பது தொடர்பானது. சிடி ஸ்கானர்களை அழிப்பது மீண்டும் சுகாதார கட்டமைப்பை கட்டியெழுப்புவதை கடினமாக்குவது தொடர்பானது.” எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் ஹமாஸ் அமைப்பை மாத்திரம் இலக்குவைக்கின்றார்கள் என்றால் ஏன் மருத்துவ கட்டமைப்பை அழிக்கின்றனர் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

காசாவின் 36 மருத்துவமனைகளில் எதுவும் முழுமையாக இயங்கவில்லை என ஐ.நா. தெரிவித்துள்ளது. கடந்த திங்கள்

கிழமை இஸ்ரேல் மீண்டும் அல்சிபா மருத்துவமனையின் மீது தாக்குதலை மேற்கொண்டது.

மேலும், இஸ்ரேல் நூற்றுக்கணக்கான மருத்துவபணியாளர்களை கைதுசெய்து, கொலை செய்ததும் நெருக்கடியை தீவிரப்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

# இஸ்ரேல் விமான தாக்குதல்: இஸ்லாமிய ஜிஹாத் தளபதி பலி





காசாவின் மேற்குக் கரையில் நேற்று முன்தினம் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் படுகாயமடைந்த பலஸ்தீனிய இஸ்லாமிய ஜிஹாத் தளபதி முஹம்மது ஹவாஷின் உயிரிழந்துள்ளார் என பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர் சென்ற காரை இலக்கு வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மொத்தத்தில், நான்கு பேர் இந்த தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

ஹவாஷின் மற்றும் நான்கு செயற்பாட்டாளர்களில் ஒருவரான அஹ்மத் பாரகாத், மார்ச் 11 அன்று இஸ்ரேலுக்குள் ஒரு தற்கொலை குண்டுதாரியை அனுப்பும் முயற்சிகளுக்குப் பின்னால் இருந்துள்ளார்.

மேலும் மார்ச் 8 அன்று ஹோமேஷ் அவுட்போஸ்ட் அருகே துருப்புக்களுக்கு எதிராக குண்டுவீச்சு மற்றும் துப்பாக்கிச் சூடு தாக்குதலை நடத்தினார் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.



# ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்

## 21 பேர் பலி

ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதல் சம்பவமானது நகர மையத்தில் அமைந்துள்ள வங்கியில் நேற்று இடம்பெற்றுள்ளதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலில் மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் அரசு ஊழியர்கள் சம்பளம் வாங்க வரிசையில் நின்று கொண்டிருந்த நிலையில் ஒருவர் தனது உடலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளார்.

இதன்போது உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்த சுமார் 50 பேர் மிர்வாய்ஸ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த ஆண்டு ஆப்கானிஸ்தானில் நடந்த மிகப்பெரிய இந்த தாக்குதலை எந்த குழுவும் இதுவரை உரிமை கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





# செங்கடல் ஊடாக பயணிக்கும் ரஷ்ய, சீன கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தமாட்டோம்

## ஹவுதி கிளர்ச்சியாளர்கள் உறுதி



காசாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து செங்கடல் வழியாக அமெரிக்க, பிரிட்டன் கொடிகளுடன் செல்லும் கப்பல்களை யேமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகள் மூலம் தாக்கி வருகின்றனர்.

இதனால் செங்கடல் பயணம் என்பது இப்போது ஆபத்து நிறைந்த பகுதியாக மாறிவிட்டது. இதனால் கப்பல்கள் தென்னாபிரிக்காவை சுற்றி தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் செங்கடல் ஊடாக பயணிக்கும் ரஷ்ய மற்றும் சீன கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தமாட்டோம் என ஹவுதி கிளர்ச்சியாளர்கள் உறுதிமொழி அளித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த அமைப்பின் பிரதான பேச்சாளர் மொகமட் அப்துல்சலாம் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு மேற்கண்ட அறிவிப்பை விடுத்துள்ளார்.

பக்கங்கள் - 5

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 22/03/2024

## பாலியல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் அதிகாரம் இனி இராணுவத்துக்கு இல்லை!

ஒன்ராரியோ, மார்ச் 22

பாலியல் தன்மையான குற்றச் சாட்டுக்களை விசாரிப்பதற்கான மற்றும் தண்டனையளிப்பதற்கான இராணுவத்தின் அதிகாரத்தை மத்திய அரசாங்கம் C2▶




# புதிய தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடிவு

**ஒன்ராரியோ, மார்ச் 22**

**இலையுதிர்காலத்தில் குடிவரவு நிலைகளை அமைக்கும் போது, நாட்டிற்கு புதிய தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையில் கட்டுப் பாட்டை விதிக்கவுள்ளதாக குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.**

**அண்மைக்காலங்களில் பரவலான மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த எடுத்த தொடர் நடவடிக்கைகளில் குடிவரவு அமைச்சின் ஒரு நடவடிக்கையாக இது உள்ளது.**

அடுத்த மூன்று ஆண்டுகளில் தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையை தற்போதைய 6.2 சதவீதத்தில் இருந்து ஐந்து சத வீதமாக குறைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

செப்டம்பர் மாதம் முதல் இலக்கு நிர்ணயிக்கப்படவுள்ளது.

கனடா ஒவ்வொரு ஆண்டும் வரும் தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையில் கூர்மையான அதிகரிப்பைக் கண்டுள்ளது.

# கனடியத் தமிழர் பேரவை மடிக்கணினியை மலையகப் பாடகி அசானிக்கு வழங்கியது!

## மனோ கணேசன் எம்.பி. வழங்கி வைத்தார்






ஒன்ராரியோ, மார்ச் 22

இலங்கையைச் சேர்ந்த மலையக பாடகி அசானிக்கு, கனடியத் தமிழர் பேரவை மடிக்கணினி வழங்கியது.

கனடியத் தமிழர் பேரவை சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் இந்த மடிக்கணினியை வழங்கி வைத்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி



# கனடாவின் காபன் விலையினால் பச்சைவீட்டு வாயு உமிழ்வு குறையும்

## அதில் ஐந்தில் ஒன்றுதான் நுகர்வோர் கார்பன் வரியில் இருந்து கிடைக்குமாம்

ஒன்ராரியோ, மார்ச் 22

கனடாவின் கார்பன் விலை 2030 ஆம் ஆண்டிற்குள் பச்சைவீட்டு வாயு உமிழ்வை ஆண்டுக்கு 100 மில்லியன் தொன்களுக்கு மேல் குறைக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் அதில் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே கன்சர்வேடிவ் கட்சியினரால் விமர்சிக்கப்பட்டு வரும் நுகர்வோர் கார்பன் வரியில் இருந்து கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கனேடிய காலநிலை நிறுவனம் மாரச் 21ஆம் திகதி வெளியிட்ட ஒரு புதிய கற்கையானது பெரிய தொழில்துறை உமிழ்ப்பான்களுக்குப் பயன்படுத்தப்படும் விலை, நுகர்வோர் எரிபொருள் வரியை விட உமிழ்வைக் குறைப்பதில்மிகப்பெரிய பங்கைக்கொண்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

ஆனாலும், நுகர்வோர் கார்பன் வரியானது சுற்றுச்சூழலுக்கு பெரும் நன்மைகளைக் கொண்டு சேர்க்கும் என சுற்றுச்சூழல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கார்பன் விலை நிர்ணயம் என்பது உமிழ்வைக் குறைப்பதற்கான மிகச் சிறந்த வழியாகும், எனவே கனடா அதன் காலநிலை இலக்குகளை அடைய முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

# சமூகப் பணியாளரின் உறுதிப்படுத்தல் சிறுவர் பால் மாற்றப் பதிவுக்கு அவசியம்

## கியூபெக் மேன்முறையீட்டு நீதிமன்றம் மீள்வலியுறுத்தல்

கியூபெக், மார்ச் 22

சிறுவர்கள் தமது பால் மாற்றத்தைப் பதிவு செய்வதற்கு முன்னர் சுகாதார நிபுணர் அல்லது சமூகப் பணியாளரின் கடிதம் ஒன்றைப் பெற வேண்டும் என்கிற சட்டத்தை கியூபெக் மேன்முறையீட்டு நீதிமன்றம் மீள் வலியுறுத்தியுள்ளது.

2021ஆம் ஆண்டில் கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பினை சவாலுக்குட்படுத்தும் தீர்ப்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்துள்ளது.

மாற்றுப்பாலினத்தினரின் கண்ணியம் மற்றும் சமத்துவத்தை இந்த சட்டம் மீறுவதாக கூறி கியூபெக்கின் நீதிமன்றம் இந்த சட்டத்தை வலிதற்றது என அறிவித்திருந்தது.

இந்த சட்டமானது இளையவர்கள் பால் மாறுவதற்கான உண்மையான தேவையை உறுதி செய்யும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் மார்ச் 21ஆம் திகதி வெளியிட்டுள்ள தமது தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### கனேடியத் தமிழர்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், பாடகி அசானியை தனது இல்லத்துக்கு அழைத்து, மடிக்கணினியை வழங்கி வைத்தார்.

கொழும்பில் எளிமையாக நடைபெற்ற இவ்வைபவத்தில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணிதரன் முருகேசு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், 'எங்களது பாடகி அசானிக்கு இந்த மடிக்கணினியை கனடியத் தமிழர் பேரவை வழங்கி உள்ளது. நான் இதில் இணைப்பாளர் மட்டுமே. இதன் மூலம், கனடியத் தமிழர் பேரவை இந்நாட்டில் வாழ்கின்ற மலையக தமிழர் உட்பட ஒட்டு மொத்த தமிழ் மக்களின் சமூக, பொருளாதார வாழ்வாதாரங்கள் தொடர்பான தனது அக்கறையை மீண்டும் வெளிப்படுத்தி உள்ளது. பாடகி அசானி மற்றும் நமது மக்கள் சார்பாக கனடியத் தமிழர் பேரவை நண்பர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை நான் தெரிவித்து கொள்கிறேன்.' என்று கூறினார்.

### பாலியல் குற்றச்சாட்டுகளை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகப்பூர்வமாக நீக்குகின்றது.

மார்ச் 21ஆம் திகதி, தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் பில் பிளயாரினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கனடாவில் நிகழும் போது, பாலியல் குற்றங்களை விசாரிப்பதற்கு இராணுவத்தினருக்கும் அதிகாரம் வழங்கும் குற்றவியல் கோவையின் ஏற்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

விசாரிப்பதற்கான உரிமை இராணுவப் பொலிஸாருக்கானது என பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

GSM – குணம்ஸ் சுப்பர்மார்க்கட் – GUNAAM SUPERMARKET

# Super Deal of this Week

## till March 25th




LOWEST PRICE
~~10.99$~~
8.99
Only at GUNAAM'S SUPER MARKET




LOWEST PRICE
~~19.99$~~
15.99
Only at GUNAAM'S SUPER MARKET



LOWEST PRICE
LB 7.99$
Only at GUNAAM'S SUPER MARKET

ஊர் ஆட்டிறைச்சி



LOWEST PRICE
LB 6.99$
Only at GUNAAM'S SUPER MARKET

Ceylon விளைமீன்

## Gunaam's super market இந்த வாரம் அள்ளித்தரும் Super Deal

### அனைத்து Fresh மீன்கள் மிக மிக குறைந்த விலையில்...

| | |
|---|---|
| Ceylon விளைமீன் | - $6.99 lb |
| Ceylon ஒரா | - $6.99 lb |
| Ceylon சீலா Fish | - $7.99 lb |
| Ceylon கும்பிளா Fish | - $6.99 lb |
| Ceylon பாரை Fish | - $7.99 lb |
| Ceylon கொடுவா Fish | - $8.99 lb |
| சுறா Fish | - $6.99 lb |

| | |
|---|---|
| இறால் | - $3.99 lb |
| ஊர் ஆட்டிறைச்சி | - $7.99 lb |
| காரல் Fish | - $7.99 lb |
| திரளி மீன் | - $7.99 lb |
| காட்டுப் பன்றி | - $4.99 lb |
| முழு King Fish | - $6.99 lb |

| | |
|---|---|
| 10 Kg Double Horse Rice | - $23.99 |
| Maharaja Rice Flour | - $8.99 |
| Maharaja Basmati Rice | - $13.99 |
| MR Goudas Sun Flower oil 3L | - $8.99 |
| MR Goudas Sea Salt | - $1.49 |

| | |
|---|---|
| MR Goudas Coconut Powder 3 For | - $10.00 |
| Nestum Serial | - $5.99 |
| Waadiya Coconut Milk Powder | - $2.99 |
| Raigum Noodles 2 for | - $5.00 |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998



# 70 ஆண்டுகளுக்கு முன் பிறந்தவுடன் மாற்றப்பட்ட இருவரிடமும் மன்னிப்பு

## மனிடோபா முதல்வர் முறைப்படி கோரினார்

ஒன்ராரியோ, மார்ச் 22

சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் மருத்துவமனையில் பிறந்தவுடன் மாற்றப்பட்ட இரண்டு ஆண்களிடம் மனிடோபா முதல்வர் வாப் கினிவ் முறைப்படி மன்னிப்பு கேட்டார்.

அதை ஒரு பயங்கரமான தவறு என்று சுடடிக்காட்டிய முதல்வர் கினிவ், அந்த செயலைத் தவிர்க்க முடியாது எனவும் ஆனால் ஒப்புக்கொண்டு பரிகாரம் செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

'எட் மற்றும் ரிச்சர்ட் இன்று மனிடோபா அரசாங்கத்தால் அநீதி இழைக்கப்பட்ட இரண்டு நபர்களாக உள்ளனர்' என்று எட்வர்ட் ஆம்ப்ரோஸ் மற்றும் ரிச்சர்ட் பியூவைஸ் அருகில் அமர்ந்திருந்தபோது கினிவ் கூறினார்.

'அவர்கள் ஒவ்வொருவரும் பூமிக்கு வந்த முதல் நாளிலிருந்தே அவர்கள் அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது' என அவர் தெரிவித்தார்.




## தொழில்நுட்பச் சிக்கலால் ஆயிரக்கணக்கான வீரர்கள்

# படைப் பணிகளுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்புத் தடுக்கப்பட்டிருக்கக் கூடுமாம்

ஒன்ராரியோ, மார்ச் 22

தொழில்நுட்பச் சிக்கலால் ஆயிரக்கணக்கான வீரர்கள் மற்றும் கனடிய ஆயுதப் படை உறுப்பினர்கள் பணியமர்த்தப்படுவதிலிருந்தோ அல்லது பொதுச் சேவைப் பணிகளுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பைப் பெறுவதிலிருந்தோ தடுக்கப்பட்டிருக்கலாம் என அண்மையில் வெளிவந்துள்ள அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

2020 நவம்பரில் தொடங்கிய இந்தப் பிரச்சினை ஜனவரி 2024 வரை தொடர்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கனடாவின் பொதுச் சேவை ஆணைக்குழுவானது மார்ச் 21ஆம் திகதியன்று, இந்த பிரச்சினையானது, பொது மக்களுக்கு திறந்திருக்கும் மத்திய அரசாங்கத்தின் பொது சேவை பணிகளுக்கு பணியமர்த்துவதில் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய வீரர்களை பாதித்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

இது சில இராணுவ உறுப்பினர்கள் மற்றும் படைவீரர்களையும் பாதித்தது, அவர்கள் பொது ஊழியர்களுக்கு திறந்த வேலைகளைப் பார்க்கவும் விண்ணப்பிக்கவும் முடியும் எனவும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# உக்ரைனுக்கான கனடியர்களின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாதது

## வெளிவிவகார அமைச்சரின் பிரதிநிதி நம்பிக்கை



ஒன்ராரியோ, மார்ச் 22

லிபரல் அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையை விமர்சிப்பது ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை கட்டுப்படுத்துவதற்கு உதவாது என நாடாளுமன்ற உறுப்பினர் ரொப் ஒலிபேண்ட் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலியின் நாடாளுமன்ற செயலாளராக ஒலிபேண்ட் உள்ளார்.

உக்ரைனுக்கான கனடியர்களின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாதது என்று தான் நம்புகிறார் எனத் தெரிவித்துள்ள ஒலிபேண்ட், இந்த விடயத்தை வைத்து விளையாட வேண்டாம் எனவும் எதிர்க்கட்சியிடம் கோரியுள்ளார்.

இந்த வாரத்தில் சட்டமாக மாறிய கனடாவுக்கும், உக்ரைனுக்கும் இடையிலான புதிய வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் கன்சர்வேட்டிவ் கட்சியினர் தொடர்ந்து விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

குறிப்பாக, கார்பன் வரி தொடர்பான அம்சங்கள் உக்ரைனிலும் கார்பன் வரியை திணிக்கும் என கன்சர்வேட்டிவ் கட்சியினர் விமர்சித்திருந்தனர்.

# பட்ஜெட் சமர்ப்பிப்புக்காக அவையில் இரவு முழுதும் காத்திருந்த அமைச்சர்!



ஒன்ராரியோ, மார்ச் 22

நியூபவுன்லாந்து மற்றும் லெப்ரடோரில் மார்ச் 22- மார்ச் 21ஆம் திகதி மாநில வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்காக, மாநிலங்களவையிலேயே மாநில நிதியமைச்சர் இரவு தங்கியிருந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

மீன்பிடியாளர்கள் குழுவொன்று மாநிலங்களவைக்கான நுழைவாயிலை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையால், மார்ச் 20ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு -செலவுத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

போராட்டம் காரணமாக வரவு – செலவுத் திட்ட சமர்ப்பிப்பு ஒத்திவைக்கப்பட்டதால், அதனைத் தவிர்க்கச் செய்வதற்காக, மாநிலங்களவை கட்டடத்திலேயே தங்கியிருந்து, வரவு – செலவுத் திட்டத்தை சமர்பிக்கத் தயாரானார் என மாநில நிதியமைச்சர் சியோபான் கோடி தெரிவித்துள்ளார்.

2024-25 காலப்பகுதிக்காக 10.4 பில்லியன் டொலர்களுக்கான வரவு செலவுத் திட்டத்தை அவர் சமர்ப்பித்திருந்தார்.

இந்த வரவு –,செலவுத் திட்டத்தில் 152 மில்லியன் டொலர்கள் துண்டு விழும் தொகையாக கணிக்கப்பட்டுள்ளது.